திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத்துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு ஸ்கூட்டரில் போக முடியாதவர்களுக்கு ஆயிரம் ரூபாய்க்கு குறைவில்லாமல் சம்பளம் வாங்குபவர்களுக்கு, கார் லோன் கேட்டால், அதை அரசு பரிசீலனை செய்யுமா? வழங்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதனுடைய முழு விவரமும் சேகரித்து தரப்படும்.

பையூர் ஏரியில் உயர் ரக மீன்கள் வளர்க்கும் திட்டம்.

*வினா எண் 795—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடஆற்காடு மாவட்டம் ஆரணி அருகில் பையூர் ஏரியில் உயர் ரக மீன்களை வளர்க்க தமிழ்நாடு அரசு மீன்துறை நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) ஆண்டுக்கு என்ன வருவாய் வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) ஆரணி நகருக்குக் கிழக்கே உள்ள பையூர் ஏரி என்னும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரியை மீன் துறை எடுத்துக்கொண்டு அதில் விரைவாக வளரும் மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் பணி மேற்கொண்டுள்ளது. ஓராண்டிற்குப் பின் கிடைக்கும் வளர்ந்த மீன்களை நகர மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம்.

(இ) பருவ மழை தவறாது பெய்து, ஏரியில் நீர்மட்டம் குறையாமலிருந்தால் அதிக அளவு மீன் குஞ்சுகளை இருப்பு செய்து, ஆண்டொன்றிற்கு 30 டன்கள் மீன்வரை மீன் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது. இதனை விற்பதால் ரூ. 60,000 வரை வருவாய் கிடைக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்ப்புத் திட்டத்திற்காக செலவழிக்கப்படுகின்ற தொகை எவ்வளவு? பருவ மழை இருந்

தால்தான் அங்கே தண்ணீர் இருக்கும் என்பது போல அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, பருவ மழை இல்லாவிட்டாலும் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருக்கக் கூடிய வசதி அந்த பையூர் ஏரியில் இருக்கிறதா ? இல்லையா ? அங்கே உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த மீன்கள் வளர்க்கப்படுவதாகச் சொன்னார்கள். எந்த வகை மீன்கள் வளர்க்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றிருக்கிறது என்ற விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அங்கே ஓரளவு போதுமான அளவிற்குத் தண்ணீர் இருக்குமேயானால், நல்ல முறையில் மீன்கள் வளர்க்கப்படுமேயானால், 20 டன்களிலிருந்து 30 டன்கள் வரை மீன் உற்பத்தி செய்ய முடியும். இந்தத் திட்டத்தை பொதுப்பணித் துறையிடமிருந்து மீன் துறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அங்கே மீன் வளர்ப்புச் செய்தவர்கள் சரியாக நடத்தவில்லை என்ற காரணத்தினாலும், அதிலே ஒரு சிலரே பயன்பெற்று வந்தார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்ததன் காரணத்தினாலும், அரசின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டு, மீன் வள கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் அதில் பங்கு பெறும் வகையில், மீன் பெருக்கம் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மீன் துறை மேற்கொண்டு இருக்கிறது. அங்கே எந்த வகை மீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பது குறித்து பெயர்கள் விவரம் இங்கே இல்லை. ஆனால் அதிகமான அளவிற்கு உற்பத்தி ஆகக் கூடிய ஒருவகை இன மீன்களைதான் அங்கே பெருக்குகின்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற மீன்கள் அந்த நகரத்திலேதான் விற்கப்படும், பெறப்படும் என்று ஒரு செய்தியை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே, வட ஆற்காடு மாவட்டம் போன்ற பகுதிகளெல்லாம் கடலுக்கு வெகு தூரத்தில் அமைந்திருப்பதால், மீன்களே கிடைப்பதில்லை. கிடைக்கும் மீன்களும் விலை அதிகமாக, சாதாரண ஏழை நடுத்தர மக்களால் வாங்க முடியாத அளவு விலையில் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகிற மீன்களை அந்தப்பகுதிலேயே விற்க வேண்டும் என்ற அளவிலே அரசு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துமா ? ஏனென்றால், இதுபோலவே சாத்தனூரில் உற்பத்தி செய்யப்படுகிற மீன்களை லாபத்தைக் கருதி கல்கத்தாவிற்கு அனுப்பப்படுகிற சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதால், அதைத்தவிர்க்க, அந்தப்

பகுதி மக்களுக்கே குறைந்த விலையில் கிடைக்கும் அளவு ஒரு சூழ்நிலையை உண்டாக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுமான வரையில் அந்தப் பகுதியிலே அந்த மீன்கள் கிடைப்பதற்கான வகையில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப் படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சாத்தனூரில் இருந்து பிடிக்கப்படுகிற மீன்கள் வேறு மாநிலங்களுக்கு வருவாய் காரணமாக் கொண்டு செல்லப்படுகிறது என்று சொன்னார்கள். தனியாகத்தான் அதை ஆராய வேண்டும்.

கோத்தகிரியில் தாலுக்கா அலுவலகம் கட்டும் திட்டம்.

*வினா எண் 796—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோத்தகிரியில் தாலுக்கா அலுவலகம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) தலைமைப் பொறியாளர் (பொதுப்பணித் துறை) அவர்களிடம் இருந்து வரைபடம் மற்றும் மதிப்பீடு பெற்று பின்னர், அரசின் அனுமதியுடன் விரைவில் கட்டப்படும்.

திரு. மு. அரங்கநாதன் : கோத்தகிரியில் தாலுகா அலுவலகக் கட்டடம் கட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன் அடிக்கல் நாட்டு விழா நடப்பதாக இருந்ததே, ஏன் அந்த அடிக்கல் நாட்டு விழா நடக்கவில்லை? என்ன காரணத்தால் அது நிறுத்தி வைக்கப் பட்டது ஏன் அந்த விழா நடக்கவில்லை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அடிக்கல் நாட்டு விழா நடத்திவிட்டு, அடிக்கல் நாட்டிவிட்டு ஆண்டுகள் பல ஆன பிறகும்கூட கட்டமுடியாத நிலை ஏற்படாதிருப்பதற்காகத்தான் கட்டுகிற நேரத்தில் அடிக்கல் நாட்டப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS